நீங்கள் எங்கு பார்த்தாலும் தேவனைக் காணலாம். பாருங்கள், நீங்கள் சுற்றிலும் நோக்கினால், எல்லாமே அவரைக் குறித்து பேசும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?, 64-12-27

## Phoenix, Arizona, USA

இது தமாஷ் பண்ணுவதற்கு இடமல்ல. எனக்கு தமாஷ் பண்ணுவதில் நம்பிக்கையில்லை... என் நண்பர் ஒருவர் என் நினைவுக்கு வருகிறார். அவர் இப்பொழுது மகிமைக்கு சென்றுவிட்டார். நகர்புறத்திலிருந்து நகரத்துக்கு தங்க வந்த தம்பதிகளைக் குறித்த ஒரு சிறு கதையை அவர் ஒருமுறை என்னிடம் கூறினார். அவர்களுக்கு ஒரு... இந்த இளம் தம்பதிகளுக்கு வயது சென்ற ஒரு தகப்பன் இருந்தார். அவர் உண்மையில் தேவனுக்காக அனல் கொண்டிருந்தார். அந்த இளம் பெண் (அது அவளுடைய தகப்பன்)... அவர்கள் சில உயர் வகுப்பு மக்களிடம் தொடர்பு கொண்டனர். உங்களுக்குத் தெரியும், இந்த விதமான உயர்தர விருந்தோம்பல் போன்றவை. ஒருநாள் அவள் தன் வீட்டில்

இத்தகைய விருந்தோம்பலை ஒழுங்கு செய்திருந்தாள்.

அவளுடைய தகப்பன் பகல் உணவிற்கு பிறகு, வேதாகமத்தை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்று சிறிது நேரம் படித்துக் கொண்டிருப்பார். அதன்பிறகு அவர் வேதாகமத்தை கீழே வைத்துவிட்டு, அழுது, கூச்சலிட்டு, கதறி, முழங்காலிலிருந்து எழுந்து, மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, மறுபடியும் வேதாகமத்தை படிப்பார். அதில் ஏதாவதொன்றைக் கண்டு, அதை கீழே வைத்துவிட்டு, அழவும் கூச்சலிடவும் தொடங்குவார். அவள், "இது என் விருந்துக்கு இடையூறாக இருக்கும். எனவே நான் – நான் – நான்... அப்பாவைக் குறித்து ஏதாவதொன்று செய்ய வேண்டும். என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை" என்று எண்ணினாள். அவள் அவரை மேல் மாடிக்கு அனுப்பிவிடுவதென்று முடிவு செய்தாள்.

7. அவள், "அவரிடம் வேதாகமத்தைக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் மேல்

மாடியிலும் அதையே செய்வார்" என்று எண்ணினாள். எனவே அவள் பூகோள புத்தகம் ஒன்றைக் கொடுத்து, "அப்பா, நாங்கள் விருந்துண்ணும் போது, நீங்கள் உலகப் படங்களை பார்த்துக் கொண்டிருங்கள்" என்று சொல்லி அவரை மேலே அனுப்பிவிட்டாள். அவள் தொடர்ந்து "எங்களுக்கு அதிக நேரம் பிடிக்காது. நாங்கள் கீழே... சிறிது நேரம் கழித்து கீழே வந்துவிடுங்கள். ஸ்திரீகள் உள்ள இடத்தில் உங்களுக்கு இருக்கப்பிடிக்காது என்று எனக்குத் தெரியும்" என்றாள்.

அவர், "தேனே, பரவாயில்லை. நான் மேலே செல்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

எனவே அவர்... அவள் அவருக்கு ஒரு விளக்கையும் ஒரு இடத்தையும் ஒழுங்குபடுத்திக் கொடுத்தாள். அவள், "இத்துடன் தொல்லை முடிந்தது. அவர் படங்களைப் பார்த்து விட்டு, சிறிது பூகோளம் படிப்பார், அதன்பிறகு சிறிது நேரம் கழித்து

அவர் கீழே இறங்கி வருவார். எல்லாம் சரியாகிவிடும்” என்று எண்ணினாள்.

8. அவர்கள் ’பிங்க்’ நிற எலுமிச்சை சாற்றைக் குடித்துக் கொண்டு, விருந்தை நடத்திக் கொண்டிருந்த நடுவில் சிறிது நேரம் கழித்து வீடு அதிர ஆரம்பித்தது. கிழவர் கூச்சலிட்டும் குதித்துக் கொண்டும் அறைக்குள் இங்கும் அங்கும் ஓடினார். அவள், “அவருக்கு என்ன நேர்ந்தது? அவரிடம் வேதாகமம் இல்லையே... அவருக்கு எப்படியாவது வேதாகமம் கையில் கிடைத்திருக்கும்” என்று எண்ணினாள்.

அவள் படிக்கட்டுகளில் ஓடிச்சென்று, “அப்பா, நீங்கள் படிப்பது வேதாகமம் அல்ல, அது பூகோளப் புத்தகம்” என்றாள்.

அவர், “தேனே, எனக்குத் தெரியும். அன்றொரு நாள் நான் வேதாகமத்தில் இயேசு நம்முடைய பாவங்களை மறதி கடலில் போட்டுவிடுவதாகவும் அதை இனி ஒருபோதும் நினையாதிருப்பதாகவும் கூறியுள்ள பாகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். சில இடங்களில்

அவர்கள் கடலின் கடையாந்தரங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று இந்த பூகோளப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. சற்று யோசித்துப் பார். அது போய்க் கொண்டேயிருக்கிறது" என்றார்.

அது அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. எனவே நீங்கள் எங்கு பார்த்தாலும் தேவனைக் காணலாம். பாருங்கள், நீங்கள் சுற்றிலும் நோக்கினால், எல்லாமே அவரைக் குறித்து பேசும்.

★★★★★